

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி சார்பில், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக முகவர்களுக்கான கூட்டம் வள்ளியூர் எம்.எஸ்.மஹாலில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வேல்முருகன், தில்லை ராஜா,மனோஜ்குமார், அருள்ராஜ் டார்வின், ஆகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர் வரவேற்றார்.நிகழ்வில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா ஏ.என். ரகு,மாநில செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைதள தன்னார்வலர் இளமாறன்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி,சேவியர்செல்வராஜா, பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் மாணவரணி அலெக்ஸ் அப்பாவு,வழக்கறிஞரணி செல்வசூடாமணி மற்றும் மாணிக்கம் மாஹின் அபுபக்கர் ஜெகன்,ரஞ்சித், எஸ்தக் கேனிஸ்டன்,இசக்கிபாபு உள்பட பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

### வேலூர் தொகுதியில்

# கேலோ இந்தியா மையம் தொடங்கப்படுமா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி. ஜுலை 22 -

விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில் கேலோ இந்தியா மையங்களை (KIC) ஒன்றிய அரசு தொடங்குமா? என்று நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு முழுவதும் மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் மேலும் கேலோ இந்தியா மையங்களைத் (KIC) திறக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் தருக?

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் இந்த மையங்களில் விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல் / உருவாக்குதல்> செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள்; மற்றும் இத்திட்டத்தின் நோக்கத்தை மேம்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இதற்கு ஒன்றிய அரசின் இளைஞர் விவகா ரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மண்டவியா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் 1250 கேலோ இந்தியா மையங்களைத் (KIC) திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இதுவரை அறிவிக்கப்பட்ட அனைத்து KICS களின் விவரங்களும் https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters எனும் வலை தளத்தில் காணலாம்.

கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் KICகளில் விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல் / உருவாக்குதல். செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters எனும் வலை தளத்தில் காணலாம்.

மேலும் இத்திட்டத்தின் நோக்கத்தை மேம்படுத்த ஒன்றிய அரசுக்கு தற்போது உத்தேசம் ஏதுமில்லை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

## ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை!

மயிலம், ஜுலை 22 -

மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். ஒன்றிய பெருந் தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஊராட்சி ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகா ம்நடைபெற்றது.

மைலம் ஒன்றிய பெருந் தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

முகாமின் கண்காணிப்பு அலுவலரும், ஊரக வளர்ச்சி துறை உதவி இயக்குனருமான தணிகை ரெத்தனமாலா முன்னிலை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதையடுத்து வேளாண்மை தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருட்களையும்,மயிலம் வட்டார அரசு மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும், ரத்த அழுத்தம், சர்க்கரை நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இல்லம் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை பெட்டகம் அடங்கிய தொகுப்பினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

அப்போது உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமிற்கு மனு கொடுக்க வந்த மகளிர் கூறுகையில் மகளிர் உரிமைத் திட்டத்தில் விடுபட்டவர்களுக்கு நிச்சயம் மகளிர் உரிமைத் தொகையை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்அவர்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் ஏராளமான மகளிர்கள் மனு செய்துள்ளதாக மகளிர்கள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன், ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜ்பரத், ஜெயந்திசேகர்,சரசு முருகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் குமுதா ரமேஷ்,பாபு, சந்திரசேகர், உள்ளிட்டதுறை சார்ந்த அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நடைபெற்ற தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள் மற்றும் BLA2, BDA ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கையை விரைவுபடுத்த ஆலோசனைகளை வழங்கினார். ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி.அன்பு மு.அசோகன், தே.பிரபாகரன், வாணியம்பாடி எம். குணசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உத்தமபாளையம் பேரூராட்சி 17 வது வார்டில் புதிய நியாயவிலைக் கடைக்கு தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., அடிக்கல் நாட்டினார். உடன் ஒன்றிய செயலாளர் அணைப்பட்டி முருகேசன், பேரூராட்சி மன்ற தலைவர் மற்றும் வார்டு கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

# எழுந்திங்கே உலவுவாய்; எப்போதும் நிலவுவாய்!



பேறறிஞர் அண்ணாவின்
பின்சென்று
கழகத்தை
ஊறறியச் செய்தவருள்
ஒருவன்நீ என்பதனை
யாரறிவார் இன்றிங்கே,
யாவுமே மறந்துவிட்டார்!

சீர்திருத்தக் கருத்துகள்
சிந்திக்கத் தூண்டுகின்ற
கூர்கொண்ட பேச்சுகள்,
கொண்டலாய்ப்
பொழிந்தவன்நீ!

தேர்கொண்ட வேந்தன்போல்
செம்மாந்து நின்ற உன்
பேர்கொண்ட மன்றங்கள்
பெருகிட ஆயிரமாய்
ஓர்கூட்டம் திட்டமிட்டு
உனைத்தள்ள முயன்றதைப்
பார்அறியும்; ஆனாலோ
பாவம்நீ அறியவில்லை;
நார்அல்ல மலராக
நறுமணம் வீசிய உன்
வேர்கிள்ள முயன்றவர்கள்
வெளியேற்றி விட்டாலும்
நீர்பாயும் ஆறுபோல் நெடிதோடும்
உன்புகழ்
யார்வெல்ல முடியுமிங்கு?
யானையை வெல்வதெங்கு?

கடவுள் கல் ,அதுபேசா
தெனக்கலைஞர் கனலுரையை
மடமக்கள் விளங்கிட,
மயக்கந்தான் தீர்ந்திடத்
திடமாகப் பேசியே
திரையுலகைப் பராசக்தி
படத்தாலே திருப்பியவன்;
பகுத்தறிவை முழங்கியவன்!

குடத்திலே இருந்தவன்
குன்றின்மேல் விளக்காக
இடங்கொண்டு கதிரவன்போல்
என்றென்றும் ஒளிர்பவன்!

தொடங்கிய அச்சுடர்
துலக்கமாய் வளர்ந்திட
அடங்கிய இருள்போல
ஆயினர் அன்றிருந்தோர்
நடுங்கியே போயினர்,
நாயகன் புதிதாக
ஒடுங்கிய திரையுலகை
உயர்த்தவே எழுந்துவிட்டான்
பிடுங்கியே பழமையைப்
பின்னுக்குத் தள்ளுபவன்!

ஆரியத்தை எதிர்க்கின்ற
அண்ணாவின்
நாடகத்தில்
வீரியத்தைக் கொண்டொருவர்
வேடமிடத் தயங்கிய
நேரத்தில் நீயன்றோ
நெஞ்சுயர்த்தி வந்தவன்,
சீரிய வேந்தனாம்
சிவாஜி வேடமேற்றுக்
கூரிய சொற்களால்
கொள்கையின் வீச்சினைப்
பேரிகை கொட்டியே
பேசிடப் பெரியார்தாம்
பூரிக்க இன்றுமுதல்
புகழ்பெறுவாய் சிவாஜியெனச்
சூரியன்போல் அப்பெயர்
சுடரிடத் துலங்கிற்று!

திரையுலகில் உன்எழுச்சி
திருப்பத்தின் முழுப்புலர்ச்சி!
நரையுலகாய் இருந்தது
நற்புதுமை பெற்றது;
அரைகுறையாய்த் தமிழ்பேசி
அவாள்இவாள் என்றுரைத்துக்
கறையான திரைத்தமிழைக்
கற்கண்டுத் தமிழாலே
அரைசாள வைத்தவன்;
அமுதத்தேன் வார்த்தவன்!
முரசொலி எங்கெங்கும் முழங்கிட
வளர்த்தவன்!

எத்தனை வேடங்கள்
என்னென்ன தோற்றங்கள்;
எத்தனை மாற்றங்கள்;
எல்லாமே ஏற்றங்கள்!

அத்தனாய் வேந்தனாய்
ஆண்டியாய்ச் செல்வனாய்,
பித்தனாய்க் கள்வனாய்,
பேதையாய்க் கோழையாய்,
குத்துவாள் மறவனாய்,
கொள்கையின் குரிசிலாய்,
சித்தனாய் அன்பனாய்,
சிரிப்பூட்டும் நகையனாய்
முத்தனாய்ப் பத்தனாய்
விடுதலை வீரனாய்,
தத்திடும் முதியனாய்,
தாவியெழும் இளைஞனாய்,
புத்தனாய்ப் புலவனாய்,
புரட்சித்தீ வளர்ப்பவனாய்,
கொத்துமலர்க் காதலிலே
கொஞ்சுகின்ற காதலனாய்
மொத்தமுள்ள வேடங்கள்
முற்றிலும்
ஏற்றவன்
இத்தனைக்கும் மேலாக
இன்னுமுண்டு பார்க்கவே;

பேராசிரியர்
மா.செல்வராசன்

அண்ணனாய்த் தம்பியாய்
அப்பனாய்ப் பிள்ளையாய்,
கண்ணனாய்ச் சிவன்முதல்
கடவுளராய்க் காமுகனாய்,
பண்ணிசைக் கூத்தனாய்
பாமரனாய், ஏழையாய்
அத்தனையும் பூண்டவன்;
திரையுலகை ஆண்டவன்!

நடிப்பிலே உனக்கீடாய்
நானிலத்தில் ஒருவரை
எடுத்துரைக்க முடியாத
இமயமாய்,
இமயத்தின்
கொடுமுடியாய்த்
தோன்றுபவன்,
கொற்றவனாய்த்
துலங்குபவன்,
தொடுவானம் ஆனவன்,
தொடத்தொட வளர்ந்தவன்!

கடிவாளம் இல்லாத
கடும்பரி போன்றவன்;
நெடுவாளை ஏந்தியே
நீடுற நடக்கின்ற
முடிவேந்தன்; பார்வையில்
முழுவதும் பகர்பவன்!

முந்நூறு படங்களிலே
முற்றிலும் மாறுபட்ட
ஐந்நூறு நடைநடந்து
அயர்த்தியவன்,
அழகனவன்!
எந்த ஒரு வேடத்தை
ஏற்றாலும் முழுவதும்
அந்த ஒரு மாந்தனாய்
ஆகின்ற ஆற்றலன்;
சிந்துமெழில் நடிப்பினிலே
சிதறிடும் சிறுதுளியும்
சிந்திசைத்துப் பாடுவது
சிவாஜி சிவாஜியே!
வெந்நீர்போல்
எப்போதும்
வெங்கனல் இருந்தாலும்
தண்ணீர்போல்
வேட்கையைத்
தணிப்பவன், தண்ணியன்!

பைந்தமிழை உனைப்போலப்
படத்திலே பேசுதற்கு
எந்த ஒரு நடிகர்க்கும்
இயலவில்லை என்பதுண்மை!

சந்தனமா, தென்றலா
தாவியெழும் அருவியா
செந்தழலா, கடல்அலையின்
சீற்றமா, பெரும்புயலா,
வந்துவக்கும் குற்றால
வசந்தமா, மலர்மணமா,
தந்திதரும் யாழிசையா
தவழ்ந்தெழும்
குழலிசையா
அந்திவான் எழுகின்ற
அழகான புள்ளிசையா
முந்திடும் இடிக்குரலா
முகில்களின் மோதலா,
விந்தையுன்
குரலிலே
விளைந்திடும்
இத்தனையும்
சிந்தைக்குத் தரும்இனிமை,
சிவாஜியின் தனித்திறமை!

ஒருமுகம் அல்லவே
உன்னிடம் ஆயிரம்
திருமுகம் உள்ளதைத்
தெரிந்தவர் ஒருசிலரே!
பெருமாளாம் திருமகன்
பிடிவாத மாய்வாய்ப்பை
வருமானம் கருதாமல்
வழங்கியவர் என்பதால்
உள்ளத்தால் அவரைநீ
ஒருநாளும் மறந்ததில்லை!

திருநாளில் இறுதிவரை
சென்றவரைக்
கண்டுவந்த
ஒருசெயல் போதுமே
உள்ளெழும் நன்றிக்கு!

பறம்புமலை அரசனவன்
பாரிபோல் வழங்கிடப்
பிறந்தவர் ஒருசிலரே!
பிறர்க்குதவும் பெரும்பண்பு
சிறந்தமனம் கொண்டவன்நீ
அறிந்தவர் மிகச்சிலரே!
அளிப்பது தெரியாமல்
அறிஞர்க்கும் கலைஞர்க்கும்
ஆக்கமாம் செயல்கட்கும்
குறிக்கோளாய்க் கல்விக்கும்
கொடைபல கொடுத்திடும்
நெறியிலே நின்றவன்,
நிழலுக்கும் மறைத்தவன்!

இன்றைய இளைஞர்கள்
எப்போதும் கற்பதற்கு
ஒன்றுண்டு உன்னிடம்,
ஒழுங்காக நேரத்தை
என்றுமே போற்றிடும்
இயல்பது நின்வாழ்வில்
வென்றுமே தந்தது;
வேலையெனும் உழைப்புதான்
நின்றுபயன் நல்குமென
நீள்உழைப்பைக் காட்டியவன்,
தின்றுறங்கி மயங்கியே
திரியாமல் நாள்தோறும்
ஒன்றிரண்டு மூன்றுவேளை
ஓயாமல் உழைத்தவன்;
நன்றதனால் பலருக்கும்
நன்மைகள் அளித்தவன்

அழகான ஓவியம்போல்
அழியாத காவியம்போல்
தழலான சூரியன்போல்
தண்ணிய வெண்மதிபோல்
முழவாக,குழலாக
முற்றிய யாழாக
வழங்கிடும் இசையேபோல்
வானெழும் முகிலேபோல்
முழங்கிடும் கடலேபோல்
முகடெழும் பனியேபோல்
விழைந்திடும் படங்களால்
விளங்கிடும் வேந்தனவன்!

அழவைத்தான் படங்களிலே;
அதனால்தான் நமையெலாம்
அழவிட்டுச் சென்றானோ!
ஆனாலும் கலையுலகம்
தொழச்செய்தான், இறப்புதான்
தொடமுடியா
தெழுந்துவிட்டான்!
பழந்தமிழாம் செந்தமிழ்போல்
பாருள்ள வரையிலும்
எழுந்திங்கே உலவுவான்,
என்றென்றும் நிலவுவான்!